# <u>மயிலாடுதுறை நகராட்சி</u>

குறள்: மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

பொருள்: மலர் போன்ற மனத்தில் நிறைந்தவனைப் பின்பற்றுவோரின் புகழ்வாழ்வு, உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும்.

கூட்ட எண்: 13/2022

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்: 20.01.2023

## <u>அவசரக்கூட்டம்</u>

அன்புடையீர்!

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – அவசரக்கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற அவசரக்கூட்டம் 2023–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23.01.2023 திங்கள் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் அவசரக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.

1. மயிலாடுதுறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை Service Provider / agency / contractor மூலம் மூன்று ஆண்டுகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை – 28 அவர்களின் செயல்முறை ஆணை எண்.35295/2022/EA2 SWM-5 நாள்.10/01/2023–ல் கீழ்காணும் விபரப்படி நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| Name of Municipality | Quantity of waste Generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimated Base cost per day (Rs in Lakh) | Estimated Base cost per year (Rs in Lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs in Lakh) | Estimated total cost per year (Rs in lakh) |
|---|---|---|---|---|---|---|
| Mayiladuthurai | 29.11 | 4,264.18 | 1.24 | 452.60 | 85.99 | 538.59 |

மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சி நிதி பற்றாக்குறை ஏற்படின் 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தில் (15th CFC SWM Tied Grant) –யை பயன்படுத்திக் கொள்ளவும், மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று ஓர் ஆண்டிற்கு பணி உத்தரவு வழங்கி அந்நிறுவனத்தின் செயல்திறன் (Performance Satisfaction) திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் அடுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளுக்கு மன்ற அனுமதியுடன் ஒப்பந்த காலத்தை நீடித்து வழங்கவும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நாளிதழ் விளம்பர செலவினத்தினை நகரட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை – 28 அவர்களின் செயல்முறை ஆணை எண்.35295/2022/ EA2 SWM-5 நாள். 10.01.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், நிபந்தனைகளின்படியும் செயல்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.4626/2022/எச்1.</u>

<u>மன்றத் தீர்மானம் எண். 366 நாள்: 23.01.2023</u>

அலுவலக குறிப்பு: ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ஒம்./ ந.செல்வராஜ்)
நகரமன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி.